தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

# இன்றைய வேளாண் செய்திகள்

## 17.09.2012 A.M

17th Sep 20012

### தமிழகத்திற்கு 2 டி.எம்.சி., கிருஷ்ணா நீர்

ஊத்துக்கோட்டை:ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நீர் இதுவரை இரண்டு டி.எம்.சி., அளவிற்கு வந்து உள்ளது.தமிழக - ஆந்திர அரசுகளின் ஒப்பந்தப்படி, 1996ம் ஆண்டு முதல்தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது. ஆண்டுதோறும் ஜூலை, அக்டோபர் மாதத்தில், எட்டு டி.எம்.சி., ஜனவரி, ஏப்ரல் மாதத்தில், நான்கு டி.எம்.சி.,தண்ணீரை தமிழகத்துக்கு ஆந்திர அரசு வழங்க வேண்டும். இந்தாண்டு கடந்த ஜூன் 2ம் தேதி முதல் தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ-பாயின்டை தண்ணீர் வந்தடைந்தது. தற்போது தொடர்ந்து கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது. வரதய பாளை யம் அருகே கால்வாய் உடைந்ததால், தற்காலிகமாக மாற்று வழியில் தமிழகத்திற்கு தண்ணீர் வருகிறது. வினாடிக்கு, 400 கன அடி வீதம் தண்ணீர் செல்லும் வகையில் சிமென்ட் பைப் அமைக்கப்பட்டு உள்ளது. இதனால், 17 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறைந்தளவு தண்ணீர் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி, தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ-பாயின்டில் வினாடிக்கு, 297 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதுவரை, 2.082 டி.எம்.சி., அளவிற்கு தண்ணீர் வந்து உள்ளது.

## 17th Sep 20012

## புளியாங் கால்வாய் புதுப்பிக்கும் பணிகளைஅரசு துவங்காததால், விவசாயிகள் களமிறங்கினர்

மரக்காணம்:மரக்காணத்தில் புளியாங் கால்வாய் பகுதியில் பொக்லைன் மூலம் தூர்வாரும் பணியை விவசா யிகள் துவக்கினர்.மரக்காணத்தில் இருந்து பக்கிங்காம் கால்வாய் வழி யாக படகில் ஆந்திராவில் உள்ள காகிநாடாவிற்கு ஆங்கிலேயர் காலத்தில் உப்பு, மீன், கருவாடு உள்ளிட்ட பொருட்கள் அனுப் பப்பட்டு வந்தது. பல ஆண்டுகளாக பக்கிங்காம் கால்வாய் பயன்பாட்டில் இல்லாததால், ஆக்கிரமிப்புகளால் தூர்ந்துபோனது.கூனிமேடு செம்மேட்டு ஏரியில் இருந்து அனுமந்தை, கீழ்பேட்டை, ஆலப்பாக்கம்,கோணவாயன்குப்பம் வழியாக புளியாங்கால்வாய் 16 கி.மீ., தூரம் உள்ளது. இந்த கால்வாய் மரக்காணத்திலுள்ள பக்கிங்காம் கால்வாயில் இணைகின்றது. உள்ளாட்சி தேர்தல் நடந்து முடிந்தவுடன் கூனிமேடு செம்மேட்டு ஏரியில் இருந்து பக்கிங்காம் கால்வாய்வரை உள்ள புளியாங்கால்வாயை புதுப்பிக்க 70 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியதாக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. இது வரை புளியாங் கால் வாய் புதுப்பிக்கும் பணி துவங்கப்படவில்லை. இதனால் கோணவாயன் குப்பத்தில் உள்ள விவசாயிகள் ஒரு ஏக்கர் நிலத்திற்கு தலா 500 ரூபாய் வசூல் செய்து பொக்லைன் மூலம் புளியாங்கால்வாய் சீரமைக்கும் பணியை துவக்கியுள்ளனர்.

## 17th Sep 20012

## ஆத்மா திட்டம் குறித்துஆலோசனை கூட்டம்

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டையில் வேளாண்மை துறை சார்பில் ஆத்மா திட்டம் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது.உளுந்தூர்பேட்டை வேளாண்மை துறை சார்பில் ஆத்மா திட்டம் குறித்த ஆலோசனை கூட்டம் வேளாண் உதவி இயக் குநர் அலுவலகத்தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் கருணாநிதி தலைமை தாங்கினார்.கூட்டத்தில், ஆத்மா திட்டத்தில் விவசாயிகள் ஆலோசனை குழு தலைவராக சீக்காடு கோவிந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆத்மா திட்டத்தின் நோக்கம், பயன்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.வேளாண் அலுவலர் சவிதா, விரிவாக்க அலுவலர் காமராஜ், சரவணசெல்வன், மகேந்திரன், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

| 17th Sep 20012 | கால்நடைகள்மருத்துவ முகாம் |
|---|---|

திண்டிவனம்:ஒலக்கூர் ஒன்றியம் மேல்பேட்டை ஊராட்சியில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.ஊராட்சி தலைவர் கண்ணகி சிட்டிபாபு தலைமை தாங்கினார். முகாமில் 682 மாடுகளுக்கு மருத்துவ பரிசோதனை நடந்தது. கோமாரி தடுப்பூசி, குடற்புழு நீக்கம், மலடு நீக்கல், சினை பாதுகாப்பு ஊசி உள்ளிட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது.டாக்டர்கள் செல்வராஜ், வெங்கடேசன், மணி கண்டன். உதவியாளர் பாபு பங்@கற்றனர்.

| 17th Sep 20012 | வறண்டது பருவ மழை இன்றி மணிமுக்தா அணை ஆயக்கட்டு பாசன விவசாயிகள் கவலை |
|---|---|

தியாகதுருகம்:தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால் மணிமுக்தா அணை வறண்டு புல்வெளி மைதானமாக காட்சியளிப்பதால் ஆயக்கட்டு பாசன விவசாயிகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.கள்ளக்குறிச்சி அருகே கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் மணி மற்றும் முக்தா ஆகிய இரு ஆறுகள் சங்கமிக்கும் இடத்தில் மணிமுக்தா அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையிலி ருந்து மணிமுக்தா ஆறு என்ற பெயருடன் கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் ஒன்றியங்களை கடந்து சென்று கடலூர் மாவட்டத்தில் கோமுகி, வெள்ளாற்றுடன் இணைந்து கடலில் கலக்கிறது.கல்வராயன் மலையில் பெய்யும் மழைநீர் மணிமுக்தா அணை யில் தேக்கி வைக்கப்பட்டு 5,000 ஏக்கர் பரப்பில் விவசாய நிலங்களுக்கு பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. அணை முழு கொள்ளளவை எட்டும் போது சுற்றுவட்டார பகுதியில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து பாசனம் செழிக்கிறது. இதனால் மறைமுகமாக 5,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இந்த அணையில் தேக்கப்படும் நீரை பயன்படுத்தி இரு போகம் நெல் சாகுபடி செய்யமுடியும்.வழக்கமாக தென்மேற்கு பருவ மழை முடியும்போது அணையில் 75 சதவீதம் நீர் நிரம்பி இருக்கும். கல்வராயன் மலையில் பெய்யும் மழையின் அளவு அதிகரிக்கும் பட்சத்தில் அணைக்கு நீர்வரத்து கூடுதலாக கிடைக்கும். இதனால் நம்பிக்கையுடன் விவசாயிகள் சம்பா பருவ பயிர் சாகுபடியை துவக்குவது வழக்கம்.இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் ஏமாற்றியது. மழையளவு குறைந்ததால்

நீர்நிலைகளுக்கு போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. தற்போது தென்மேற்கு பருவமழை முடியும் தறுவாயில் உள்ள நிலையில் மணிமுக்தா அணையின் பள்ளமான இடத்தில் மட்டும் சிறிதளவு தண்ணீர் தேங்கி குட்டை போல் காட்சியளிக்கிறது.அணையில் கடல்போல் தண்ணீர் தத்தளிக்க வேண்டிய நீர்பிடிப்பு பகுதிகள் தற்போது தண்ணீர் இன்றி புல்வெளி மைதானம் போல் காட்சியளிக்கிறது. இதனால் இந்த ஆண்டு குறித்த நேரத் தில் சம்பா சாகுபடியை துவக்கமுடியுமா என்ற கவலை விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.விரைவில் துவங்கவுள்ள வடகிழக்கு பருவமழையாவது கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் நடவுக்காக நாற்றுகளை வளர்த்து தயார் நிலையில் வைத்துள்ளனர். அணை நிரம்பினால் மட்டுமே இப்பகுதியில் நெல் மகசூல் அதிகரிக்கும் என்பதால் மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். வடகிழக்கு பருவமழையும் ஏமாற்றினால் இப்பகுதி நெல்தானிய உற்பத்தியில் பெருமளவு சரிவு ஏற்படும்.

**17th Sep 20012** | **உழவர் சந்தைக்குகாய்கள் வரத்து அதிகரிப்பு**

தர்மபுரி: தர்மபுரி உழவர் சந்தைக்கு, காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளது.தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, ஒட்டப்பட்டி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர் ஆகிய உழவர் சந்தைகளில் மூலம் பொது மக்கள் காய்கறிகள் வாங்க அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.நேற்று முன்தினம் புரட்டாசி சனிக்கிழமையொட்டி, உழவர் சந்தையில் வழக்கத்தை விட கூட்டம் அதிகம் இருந்தது. அதே போல் உழவர் சந்தைக்கு வரும் காய்கறிகளின் வரத்தும் அதிகம் இருந்தது.தர்மபுரி உழவர் சந்தைக்கு தினம், 30 டன் வரை காய்கறிகள் விற்பனைக்கு வரும். நேற்று, 32 டன் காய்கறிகள் விற்பனைக்கு வந்தது. கடந்தசில வாரங்களாக காய்கறிகள் விலை குறைந்திருந்தது. நேற்றும் வழக்கமான விலையில் காய்கறிகள் விற்பனைக்கு கிடைத்தது.தக்காளி அதிக உற்பத்தி காரணமாக நேற்று, ஒரு கிலோ, 4 ரூபாய் முதல், 5 ரூபாய்க்கும், வெண்டை, 6, பீர்க்கன், 5, அவரை, 12, சின்ன வெங்காயம் , 20, பெரிய வெங்காயம், 14, கத்தரி, 4 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.அதிகபட்ச விலையாக பீன்ஸ் ஒரு கிலோ, 28 ரூபாய்க்கும், உருளை கிழங்கு, 24 ரூபாய்க்கும், காலிஃப்ளவர், கேரட், 20 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. விலை மலிவு காரணமாக, காய்கறிகள் விற்பனை அதிகரித்து இருந்தது.

17th Sep 20012 | **குறை தீர்க்கும் கூட்டம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (17ம் தேதி) மாலை, 4 மணிக்கு, கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது.கலெக்டர் மகேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் இன்று (17ம் தேதி) மாலை, 4 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் மகேஸ்வரன் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில், பால் உற்பத்தியை பெருக்குதல், விற்பனையை கூட்டுதல் மற்றும் இதர பணிகள் சம்மந்தமாக விவாதிக்கப்படவுள்ளது. எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து நிவர்த்தி பெறலாம், என கூறப்பட்டுள்ளது.

17th Sep 20012 | **காலம் கடந்து நடக்கும் நெல் விவசாயம் ஆர்வத்துடன் ஈடுபடும் ஆதிவாசிகள்**

பந்தலூர்: பந்தலூரில் காலம் கடந்து நடந்து வரும் நெல் விவசாயத்தில், ஆதிவாசிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர். பந்தலூர் அருகேயுள்ள எருமாடு பகுதியில் நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதிரா என்ற நெல் ரகம் 130 நாட்களிலும், தொண்டி, குட்டிவளியன், மண்ணுவளியன் ஆகிய ரகங்கள் 160 நாட்களிலும் அறுவடை செய்யப்படும். இதில் நடப்பு ஆண்டில் ஜூன் மாதம் துவங்க வேண்டிய தென்மேற்கு பருவமழை போக்கு காட்டி வந்ததால், ஆடி மாதம் துவங்க வேண்டிய நெல் விவசாயமும் குறித்த நேரத்தில் மேற்கொள்ள இயலாமல் போனது.தற்போது, இப்பகுதிகளில் தொடர்மழை பெய்து வருவதால், கடந்த 35 நாட்களுக்கு முன்னர் விதைக்கப்பட்ட நெல் நாற்றுக்களை நடவு செய்யும் பணிகள் ஆங்காங்கே நடக்கிறது. முள்ளு குரும்பர் இனத்தை சார்ந்த ஆதிவாசிகள் மட்டுமே நெல் விவசாயத்தில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.ஏக்கர் ஒன்றுக்கு 50 கிலோ விதை நெல் விதைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் நாற்றுக்களை நடவு செய்து, அறுவடை செய்தால் 1000 கிலோ நெல் கிடைக்கும். இயற்கை உரத்துடன், ரசாயன உரங்களும் பயன்படுத்தப்படுகிறது. கண்களுக்கு பசுமையாக காட்சியளிக்கும் நெல் வயல்களுக்கு போதிய மழை கிடைத்தால் மட்டுமே விவசாயிகளுக்கும் பலன் கிடைக்கும்.

17th Sep 20012

## முதல்வரின் சம்பா சாகுபடி சிறப்புதிட்டம்: நெல் விதை வினியோகம்

முசிறி: தமிழக முதல்வரின் சம்பா சாகுபடி சிறப்பு தொகுதி திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு இலவச நெல் விதை விநியோகத்தை, முசிறி யூனியன் சேர்மன் துவக்கிவைத்தார்.முசிறி வேளாண் கோட்டத்தில், தமிழக முதல்வர் அறிவித்துள்ள சம்பா சாகுபடி சிறப்பு தொகுதி திட்டத்தின் கீழ், இலவசமாக நெல் விதை வழங்கும் துவக்க விழா, யூனியன் அலுவலக வளாகத்தில் நடந்தது. வேளாண்மை துறை அலுவலகத்தின் மூலம், சமுதாய நாற்றங்கால் அமைக்க, விவசாயிகளுக்கு இலவச நெல்விதை வழங்கும் விழாவுக்கு, வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் கணேசன் முன்னிலை வகித்தார். யூனியன் சேர்மன் சரஸ்வதி தலைமை வகித்து சமுதாய நாற்றங்கால் சிறப்பு திட்டத்தின் கீழ், அய்யம்பாளையம், முசிறி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இலவசமாக நெல் விதைகளை வழங்கி, நெல்விதை வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்.பின் வேளாண்மை துறை அதிகாரிகள் கூறுகையில்,""ஒரு ஏக்கருக்கு 19 ஆயிரம் ரூபாய் மானியத்துடன் இடுபொருள், விதைகள், ஊக்கத்தொகை ஆகியவை, முசிறி வட்டாரத்தில், 50 ஏக்கர் அளவில் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது," என்று கூறினர்.விழாவில் வேளாண் அலுவலர் முரளிதரன், துணை வேளாண் அலுவலர் கணேசன், உதவி அலுவலர்கள் கலைச்செல்வன், ராஜகோபால் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

17th Sep 20012

## புதுகையில் கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

புதுக்கோட்டை: இரண்டு மணிநேரம் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்ததால், புதுகை நகரின் முக்கிய பகுதிகளில் மழை தண்ணீர் குளம்போல் தேங்கியது. மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டதால், மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி நிலவுகிறது. நீர்நிலைகள் காய்ந்ததால், விவசாயப் பணிகள் முடங்கியது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக டெல்டா பகுதிகுட்பட்ட,

புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகள் மத்தியில் எழுந்தது.நேற்று முன்தினம் காலை முதல், புதுக்கோட்டையில் வழக்கம் போல், வெயில் வெளுத்து வாங்கியது. ஆனால் மாலை, ஐந்து மணிக்கு, திடீரென்று கார்மேகம் சூழ்ந்து, சூறைக்காற்று வீசத் துவங்கியது. சிறிது நேரத்தில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இரண்டு மணி நேரம் வரை, தொடர்ந்து பெய்த கன மழையால், நகரின் பல பகுதிகளில் மழை தண்ணீர் குளம்போல் தேங்கியது. சாலைகள், வீதிகள், கழிவுநீர் ஓடைகள், வரத்துவாரிகள் மற்றும் தோரண வாய்க்கால்களில் மழை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. புதிய பஸ்ஸ்டாண்ட், ராஜகோபாலபுரம், கம்பன்நகர், பூங்காநகர், தெற்கு, 4ம் வீதி, போஸ்நகர் உள்ளிட்ட பகுதிகளில், வீடுகள் முன், மழை தண்ணீருடன் சாக்கடைகளிலிருந்து வெளியேறிய கழிவுநீரும் கலந்து தேங்கியதால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாயினர். இருந்தும், திடீரென்று பெய்த அந்தி மழையால், வெயிலின் தாக்கம் தணிந்து இதமான சூழ்நிலை தென்பட்டது. புதுக்கோட்டை நகரம் மட்டுமின்றி, மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

| 17th Sep 20012 | **மின் உற்பத்தியில் முக்கிய பங்காற்றும் மூங்கில்சாகுபடியை அதிகரிக்க புதுகை கலெக்டர் உறுதி** |
|---|---|

புதுக்கோட்டை: மின் உற்பத்திக்கு மூங்கில் மரங்கள் முக்கிய பங்கு வகிப்பதால், புதுக்கோட்டை மாவட்டத்தில் மூங்கில் சாகுபடியை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் துவக்கியுள்ளது.மூங்கில் மரங்கள் பொதுவாக கட்டுமானப் பணிகளுக்கும், பந்தல் அமைத்தல், வீட்டு உபயோக பொருட்கள், அழகு சாதன பொருட்கள் மற்றும் இசைக்கருவிகள் தயாரித்தல் போன்றவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. இருந்தும் மூங்கிலின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வனப்பகுதிகளில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுவந்த மூங்கில் மரங்கள், தற்போது தரிசு நிலங்கள் மற்றும் விவசாய விளை நிலங்களிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.இதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட, விதவிதமான மூங்கில் செடிகளை தோட்டக்கலைத் துறையினர் அறிமுகப்படுத்தி வருகின்றனர்.தற்போது மூங்கில் மரங்களை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் துவங்கியுள்ளது. மும்பையில் உள்ள டாடா மின் உற்பத்தி நிறுவனம் இதை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால் மூங்கில் மரங்களின் தேவை மேலும் பலமடங்கு அதிகரித்துள்ளது.வறட்சி, பலத்த மழை,

சூறாவளிக் காற்று போன்ற, இயற்கை இடர்பாடுகளை எதிர்கொண்டு வளரும் ஆற்றல் படைத்தவை என்பதால், மூங்கில் மரங்கள் சாகுபடி செய்வது எளிது. இவற்றை முறையாக பராமரிப்பதன் மூலம், ஒரு ஏக்கருக்கு 40 டன் வரை மகசூல் கிடைக்கும். இதன்மூலம் மூங்கில் சாகுபடியில், அனைத்து செலவுகளும் போக ஏக்கருக்கு, குறைந்தபட்சம், ஒரு லட்சம் ரூபாய் வரை உற்பத்தியாளர்களுக்கு நிகர லாபம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.மேலும், மூங்கில் மரங்களை நடவு செய்வது முதல், அறுவடை செய்வது வரையிலான, புதிய தொழில்நுட்ப முறைகள் மற்றும் நவீன இயந்திரங்களை தோட்டக்கலைத் துறையினர் அறிமுகப்படுத்தியுள்ளனர்.மின்சார உற்பத்திக்கு தேவையான மூங்கில் மரங்களை, இரண்டு முதல் மூன்று செ.மீ., அளவுள்ள சிறு துண்டுகளாக வெட்டி எடுக்கும் புதிய கட்டர் மெஷின் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் உதவியுடன், ஒரு மணி நேரத்தில், 10 ஆயிரம் கிலோ வரையிலான மூங்கில் மரங்களை அறுவடை செய்து, சிறிய துண்டுகளாக தரம் பிரிக்க முடியும்.மூங்கில் சாகுபடி மற்றும் அறுவடை குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், புதுக்கோட்டை அடுத்த பெருங்கொண்டான்விடுதியில் நடந்தது. கலெக்டர் கலையரசி தலைமை வகித்தார். முன்னாள் கலெக்டர் தியாகராஜன், சென்னை தோட்டக்கலை கமிஷனர் அலுவலக பொதுமேலாளர் (மூங்கில் திட்டம்) பிரதாபன், மேட்டுப்பாளையம் வனயியல் கல்லூரி பேராசிரியர் சுரேஷ், மும்பை டாடா மின் உற்பத்தி நிறுவனத்தின் தலைமை மேலாளர் பார்டாக்கி, டி.வி.எஸ்., எரிசக்தி நிறுவன ஆலோசகர் நாகப்பன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் விஜயகுமார் உட்பட அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.மின்சார உற்பத்திக்கு மூங்கில் முக்கிய பங்கு வகிப்பதால், தோட்டக்கலைத் துறையினர் மூலம் விவசாயிகள் பங்களிப்புடன், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள், அரசு தோட்டக்கலை பண்ணைகள், வனப்பகுதிகள் மற்றும் தரிசு நிலங்களில் மூங்கில் மரங்களை அதிகளவு சாகுபடி செய்ய மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. மேலும் மூங்கில் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும், மானியத்துடன் கூடிய கடனுதவிகள் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் கலையரசி உறுதியளித்துள்ளார்.

**17th Sep 20012**

## உர வினியோகத்தில் குறைபாடு விவசாயிகளுக்கு வேண்டுகோள்

தஞ்சாவூர்: "உர வினியோகம் குறித்து ஏதாவது குறைகள் விவசாயிகளுக்கு இருந்தால், அதுகுறித்து தெரிவிக்கலாம்' என, வேளாண்மை இணை இயக்குனர் முகம்மது யாகியா

தெரிவித்தார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:தஞ்சை மாவட்டத்தில் சம்பா சாகுபடி மேற்கொள்ள சமுதாய நாற்றங்கால், நடவு செய்ய அடியுரம் ஆகியவற்றை, மானிய விலையில் வினியோகிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு தேவையான பொட்டாஷ் உரம் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.மேற்கண்ட உர வினியோகத்தில் ஏதாவது குறைபாடு, இடர்பாடுகள் உள்ளதா? என, அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர். இதில் குறைகள் இருந்தால், விவசாயிகள் உடனடியாக சம்பந்தப்பட்ட வேளாண்மைத்துறை உதவி இயக்குனர்களை அணுகி தெரிவிக்கலாம். குறைகள் உடனுக்குடன் களைய ஒத்துழைப்பு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

17th Sep 20012

## 1,000 விவசாயிக்கு மரக்கன்று வழங்கல்

ஜேசீஸ் சங்கம் சார்பில் ஆயிரம் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது.ஜேசீஸ் சங்கம் சார்பில், ஜேசீஸ் வார விழா மன்னார்குடி உழவர்சந்தையில் நேற்று முன்தினம் நடந்தது. இதில், மன்னை ஜேசீஸ் தலைவரும், ஆசிரியருமான அன்பரசு தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில், ஆயிரம் விவசாயிகளுக்கு மா, பலா, கொய்யா, எலுமிச்சை, கருவேப்பிலை மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. இதில், எலுமிச்சை, பலா உள்ளிட்ட மரக்கன்றுகளை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச்சென்றனர்.நகராட்சி தலைவர் சுதா, உழவர் சந்தை நிர்வாக அலுவலர் காமராஜ், மன்னை அரசு கலைக்கல்லூரி என்.சி.சி., அலுவலர் இருளப்பன், பொருளாளர் முருகபூபதி உள்பட பலர் பங்கேற்றனர்.

17th Sep 20012

## குறுவை நெல் அறுவடை தீவிரம் மகசூல் அதிகம் கிடைக்கும் வாய்ப்பு

தஞ்சை மாவட்ட விவசாயிகள், 8,500 ஹெக்டரில் குறுவை நெல் அறுவடை பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.தஞ்சையில் நடப்பாண்டு குறுவை பருவத்தில், 21 ஆயிரத்து, 500 ஹெக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், முன்பட்ட குறுவை நடவு மற்றும் ஃபோர்வெல் மூலம் தண்ணீர் பாய்ச்சியும், 8,500 ஹெக்டேர் பரப்பில் விளைவிக்கப்பட்ட நெற்பயிர்கள், அறுவடைக்கு தயாராக உள்ளது.தஞ்சை மாவட்டத்தில், திருப்பனந்தாள், கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம் வட்டார பகுதிகளில், நெல் அறுவடை பணியில்

விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.தமிழக முதல்வரின் துரித நடவடிக்கையால், குறுவை சாகுபடிக்கு போதுமான உரம், மும்முனை மின்சாரம் மூலம் ஃபோர்வெல் தண்ணீரும் குறைவின்றி கிடைத்தது. இதுதவிர நடப்பாண்டு, நெற்பயிர்களில் பூச்சி, நோய் தாக்குதல் வெகுவாக குறைந்து காணப்படுகிறது. கடுங்குளிர் அடிக்காமல், தட்பவெட்ப சூழல் சாதகமான நிலையில் இருந்ததால், குறுவை பருவ நெல் மகசூல் அதிகரித்துள்ளது.கடந்தாண்டு விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகள், தமிழ்நாடு நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் வாங்கப்பட்டது. இதனால், நிர்ணயிக்கப்பட்ட விலைதான் கிடைக்கும் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். தற்போது வெளிமார்க்கெட்டில் கிராக்கி ஏற்பட்டுள்ளதால், நேரடியாக வியாபாரிகள் வயல்களுக்கு சென்று நெல் மூட்டைகளை போட்டி போட்டு வாங்கத் துவங்கியுள்ளனர். இதனால், நடப்பாண்டு விவசாயிகளுக்கு குறுவை நெல் மகசூலில் அதிக லாபம் கிடைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.இதுகுறித்து தஞ்சை வேளாண்மைத்துறை இணை இயக்குனர் இசட் முகமது யாகியா கூறியதாவது:கடந்தாண்டு குறுவை நெல், 60 கிலோ எடையுள்ள ஒரு மூட்டை, 700 ரூபாய் முதல், 750 ரூபாய்க்கு விவசாயிகள் விற்றனர். நடப்பாண்டு குறுவை நெல், 950 ரூபாய் முதல், 970 ரூபாய் வரை, விற்று வருகின்றனர். கூடுதலாக மூட்டைக்கு, 200 ரூபாய் விவசாயிகளுக்கு லாபம் கிடைத்துள்ளது.தஞ்சை மாவட்டத்தில் வழக்கமாக, குறுவையில் நெல், 30 ஆயிரம் ஹெக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்படும். மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு தாமதமானதால், குறுவை சாகுபடி, 21 ஆயிரம் ஹெக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. ஒரு ஹெக்டேருக்கு, ஆறரை டன் நெல் மகசூல் கடந்தாண்டு இருந்தது. நடப்பாண்டு, ஆறரை டன் அல்லது அதற்கு மேலும், நெல் மகசூல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

| 17th Sep 20012 | தேனி உழவர் சந்தையில்காய்கறி விலை உயர்வு |
|---|---|

தேனி:தேனி உழவர்சந்தையில் நேற்று மலைக்காய்கறிகள் விலை மட்டும் அதிகமாக இருந்தது.தேனி உழவர்சந்தையில் 60 கடைகள் மட்டுமே உள்ளன. ஆனால் நேற்று 73 விவசாயிகள் வந்திருந்தனர். இதனால் கூடுதல் விவசாயிகள், இடமில்லாமல் தங்களது விளை பொருட்களை உழவர்சந்தை வளாகத்திற்குள், தரையில் போட்டு விற்பனை செய்திருந்தனர். மலைக்காய்கறிகளின் விலை மட்டும் அதிகமாக இருந்தது.காய்கறி விலை நிலவரம் (கிலோவிற்கு ரூபாயில்): கத்தரி- 18, தக்காளி- 5, வெண்டைக்காய்- 18, அவரைக்காய்- 24, கொத்தவரை- 10,

சுரைக்காய்- 4, புடலங்காய்- 10, பாகற்காய்- 16, பீர்க்கு- 14, முருங்கைக்காய்- 10, பூசணி- 10, உருட்டு பச்சைமிளகாய்- 26, சம்பா பச்சைமிளகாய்- 24, தேங்காய்- 6, பீட்ரூட்- 6, நூக்கல்- 12, முள்ளங்கி- 10, முருங்கைபீன்ஸ்- 40, பட்டர்பீன்ஸ்- 60, சோயாபீன்ஸ்- 55, செலக்ஷன் பீன்ஸ்- 20, முட்டைக்கோஸ்- 10, காரட்- 18, டர்னிப்- 15, சவ்சவ்- 20, காலிபிளவர்- 10, ப.பட்டாணி- 90, இஞ்சி- 50, பூடு- 40, உருளைக்கிழங்கு- 24, கருணைக்கிழங்கு- 24, சேனை- 24, மரவள்ளி- 9, மொச்சை- 25 கருவேப்பிலை- 24, மல்லி- 16, சின்னவெங்காயம்- 25, பெல்லாரி- 15, கீரைவகைகள்- 5, காளான்- 170 ரூபாய்.

| 17th Sep 20012 | **விவசாயிகளுக்கு அவசியமாகிறதுகால்நடை நோய் விழிப்புணர்வுஉதவி இயக்குனர் கருத்து** |
|---|---|

ராஜபாளையம்:"விவசாயிகள் உபதொழிலாக<, கால்நடை வளர்ப்பு மாறி வருவதால், அதன் நோய் மற்றும் விழிப்புணர்வு அவசியம்," என, கால்நடை பராமரிப்பு துறை உதவிஇயக்குனர் ஜெயராமன் கூறினார்.ராஜபாளையம் கால்நடை பல்கலை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடந்த, கால்நடை நோய் விழிப்புணர்வு முகாமை துவக்கி வைத்து ,அவர் பேசுகையில், ""லாபம் தரும் தொழிலாக கால்நடை வளர்ப்பு உள்ளது. விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இது போன்ற முகாமின் நோக்கம். விவசாயிகளை பொறுத்தவரை, வருமானம் தரும் உபதொழிலாக, கால்நடை வளர்ப்பு உள்ளது. நோயின் தன்மை மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியம்," என்றார். நோய் புலனாய்வு பிரிவு உதவிஇயக்குனர் வரத நாராயணன் ,பயிற்சி மைய உதவிபேராசிரியர் தங்கதுரை கோமாரி, காசநோய், ரேபிஸ் , உதவிடாக்டர் கார்த்திக் பேசினார்.

| 17th Sep 20012 | **சீவநல்லூரில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்** |
|---|---|

செங்கோட்டை: சீவநல்லூரில் தமிழக முதல்வரின் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.

செங்கோட்டை அருகேயுள்ள சீவநல்லூரில் நடந்த தமிழக முதல்வரின் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாமிற்கு சீவநல்லூர் பஞ்.,தலைவர் சட்டநாதன் தலைமை வகித்தார். கால்நடை உதவி டாக்டர் சிவகுமார் சார்பில் மாடுகளுக்கு கிருமிகள் நீக்கம், தடுப்பூசிகள், சினை

பரிசோதனைகள், செயற்கை முறை கருவூட்டல் போன்ற பல்வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது. சிறந்த கன்றுகளுக்கு பஞ்.,தலைவர் பரிசுகள் வழங்கினார். முகாமில் திரளான விவசாயிகள் கால்நடைகளை கொண்டு வந்து பயன் பெற்றனர்.

17th Sep 20012

## தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக...நாட்டின் சர்க்கரை உற்பத்தி தேவையை விஞ்சும்



மும்பை:நாட்டின் சர்க்கரை உற்பத்தி, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, வரும் சந்தைப்பருவத்தில் (அக்.,-செப்.,) உள்நாட்டு தேவையை விட, அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இந்தியாவின் மொத்த சர்க்கரை உற்பத்தியில், மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் பங்களிப்பு 45 சதவீதமாக உள்ளது. மகாராஷ்டிரா:ஆனால், நடப்பாண்டு, மேற்கண்ட மாநிலங்களில், பருவ மழை குறைந்துள்ளதால், கரும்பு விளைச்சல் குறைந்து, சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது. மகாராஷ்டிராவில், சென்ற ஆகஸ்ட் மாத நிலவரப்படி, கரும்பு பயிரிடும் பரப்பளவு 9.04 லட்சம் ஹெக்டேராக குறைந்துஉள்ளது. இது, சென்ற ஆண்டு இதே மாதத்தில் 10.10 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இதனால், இம்மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 89.5 லட்சம் டன்னில் இருந்து,65 லட்சம் டன்னாக குறையும் என, இந்திய சர்க்கரை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு (இஸ்மா) மதிப்பிட்டுள்ளது.அது போன்று, மதிப்பீட்டு காலத்தில், கர்நாடகாவின் கரும்பு பயிரிடும் பரப்பளவு, 4.30 லட்சத்தில் இருந்து 3.84 லட்சம் ஹெக்டேராக குறைந்துஉள்ளது. இதன்

விளைவாக, இம்மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 21 சதவீதம் சரிவடைந்து, 38 லட்சம் டன்னில் இருந்து 30 லட்சம் டன்னாக குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. உத்தர பிரதேசம்:அதே சமயம், உத்தர பிரதேச கரும்பு விவசாயிகள், கரும்பு பயிரிடும் பரப்பளவை 2.20 லட்சம் ஹெக்டேர் அதிகரித்து, 22.05 லட்சத்தில் இருந்து 24.25 லட்சம் ஹெக்டேராக உயர்த்தியுள்ளனர்.இதனால், இம்மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 13.27 சதவீதம் அதிகரித்து, 6.97 லட்சம் டன்னில் இருந்து, 7.9 லட்சம் டன்னாக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.மதிப்பீடு:இதனையடுத்து, மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் குறையும் சர்க்கரை உற்பத்தியை, உத்தரபிரதேசம் ஈடுசெய்யும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. 2012-13ம் பருவத்தில், நாட்டின் கரும்பு பயிரிடும் பரப்பளவு, 4.5 சதவீதம் அதிகரித்து 52.88 லட்சம் ஹெக்டேராக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2011-12ம் பருவத்தில், 50.63 லட்சம் ஹெக்டேராக உள்ளது.தென்னிந்தியாவில், கர்நாடகாவைத் தொடர்ந்து, ஆந்திர மாநிலத்திலும் சர்க்கரை உற்பத்தி குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், 2 லட்சம் ஹெக்டேரில் கரும்பு பயரிடுவது வழக்கம். ஆனால், பல்வேறு காரணங்களால், இம்மாநிலத்தில், வரும் பருவத்தில், கரும்பு பயிரிடும் பரப்பளவு 10-20 சதவீதம் குறையும் என, தெரிகிறது. பல விவசாயிகள், சோளம், சோயா போன்ற பிற பயிர் வகைகளுக்கு மாறியது தான் இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.தமிழகம்:அதே சமயம், தமிழகத்தில் கரும்பு பயிரிடும் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. கடந்த பருவத்தில், தமிழகத்தில், 3.35 லட்சம் ஹெக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டிருந்தது. இது, நடப்பு பருவத்தில், 3.73 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இதனால், சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.எனினும், நடப்பு பருவத்தில், டெல்டா பகுதியில் கரும்பு சாகுபடி குறைவதற்கு, போதிய பாசன வசதி கிடைக்காததும், பயிர்களை பாழாக்கும் எலிகளை ஒழிக்க முடியாததும் காரணம் என, விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். ஒட்டுமொத்தத்தில், வரும் 2012-13ம் சர்க்கரை பருவத்தில், நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தி 8 சதவீதம் குறைந்து, 2.4 கோடி டன்னாக இருக்கும் என, 'இஸ்மா'வும், 2.45 கோடி டன்னாக இருக்கும் என, மத்திய உணவு அமைச்சகமும் மதிப்பிட்டுள்ளன. பயன்பாடு:சர்க்கரை உற்பத்தியை விட, உள்நாட்டில் அதன் பயன்பாடு குறைவாகவே உள்ளதால், 15 லட்சம் டன் சர்க்கரை உபரியாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு, 40 லட்சம் டன் சர்க்கரை உபரியாக இருந்தது. நடப்பு 2011-12ம் பருவத்தில், 35 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது. வரும் 2012-

13ம் பருவத்தில், சர்க்கரை கையிருப்பு மற்றும் உற்பத்தியை மதிப்பிடுகையில், உள்நாட்டு தேவைக்கும் அதிகமாகவே சர்க்கரை இருக்கும் என, கணிக்கப்பட்டுள்ளது. எனவே, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, சர்க்கரை இருப்பு, தேவையை விட அதிகமாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

17th Sep 20012

## சரிந்தது கொண்டைக்கடலைஉயர்ந்தது சூரியகாந்தி எண்ணெய்



விருதுநகர்:விருதுநகர் சந்தையில், கொண்டைக்கடலை விலை, மூட்டைக்கு, 400 ரூபாய் குறைந்துள்ளது. அதே சமயம், ஒரு டின் பாமாயில் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் விலை, 15 - 20 ரூபாய் உயர்ந்துள்ளது.சர்க்கரை மூட்டைக்கு 3,775 லிருந்து 3,755 ரூபாயாக குறைந்துள்ளது. அதுபோன்று, கடலை எண்ணெய் விலை, 1,850 லிருந்து 1,750, பாமாயில் 1,030 லிருந்து 1,015, பொடி உளுந்து 4,200 லிருந்து 3,900, உளுந்தம் பருப்பு 6,100 லிருந்து 5,500, பர்மா உளுந்தம் பருப்பு 5,700 லிருந்து 5,400, பொடி உளுந்தம்பருப்பு 5600 லிருந்து 5200, துவரை 5000 லிருந்து 4700, பொடித் துவரை 4,200 லிருந்து 3,300, பாசிப் பருப்பு 6,400 லிருந்து 6,000 ,பொடிப் பாசிப் பருப்பு 6,200 லிருந்து 5,600, கொண்டைக் கடலை 5,800 லிருந்து 5,400, பொரி கடலை 4,280 லிருந்து 4,180, ரவை 2,820 லிருந்து 2,810 ரூபாயாக குறைந்துள்ளது. அதேசமயம், சூரியகாந்தி எண்ணெய் 1,390 லிருந்து 1,410 , மைதா 2,770 லிருந்து 2,780 ரூபாயாக உயர்ந்துள்ளதுநிலக்கடலை பருப்பு மூட்டை 5,400 , கடலை புண்ணாக்கு 4,300, உளுந்து 4,300, பர்மா உளுந்து 4,100, துவரம் பருப்பு 7,300, பொடி துவரம் பருப்பு 6,400, பாசிப்பயறு நாடு 4,800, லயன் பாசிப்பயறு 4,800 ஆக விலை உள்ளது. சம்பா மிளகாய் வற்றல் குவிண்டாலுக்கு 3,800

முதல் 4,200 ரூபாய் வரையும், சோடை வற்றல் 1,400 முதல் 1,500 ரூபாய் வரையும் உயர்ந்துஉள்ளது.

17th Sep 20012

## உடுமலையில் ரூ.11 கோடியில் தீவன தொழிற்சாலை

உடுமலை:உடுமலை அருகே கணபதிபாளையத்தில், 11 கோடி ரூபாய் முதலீட்டில் நவீன "பெல்லட்' தீவன உற்பத்தி ஆலையை, சுகுணா புட்ஸ் நிறுவனம் துவக்கிஉள்ளது. இதுகுறித்து நிறுவனத்தின் தமிழக மண்டல பொதுமேலாளர் கார்த்திகேயன் கூறியதாவது:நிறுவனம், ஆண்டுக்கு 75 லட்சம் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறது. கறிக்கோழி உற்பத்திக்கு தேவையான தீவனங்களை, நிறுவனமே சொந்தமாக தயாரிப்பதுடன், பிற நிறுவனங்களுக்கும் விற்பனை செய்கிறது. ஆண் டுக்கு 19 லட்சம் டன் தீவனம் தயாரிக்கப்படுகிறது.

புதிய தொழிற்சாலையில், ஒரு மணி நேரத்துக்கு 10 டன் கோழி மற்றும் மாட்டு தீவனங்களை தயாரிக்கும் வகையில் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. தீவன உற்பத்தியை இருமடங்காக உயர்த்த தேவையான கட்டமைப்பு வசதிகள் உள்ளன. தீவன உற்பத்திக்கு தேவையான மக்காச்சோளத்தை, சுற்றுப்பகுதி விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதுடன், தீவன உற்பத்திக்கு, தரமான மக்காச்சோளமும் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

17th Sep 20012

## பருத்தி ஏற்றுமதியில் நிலையான கொள்கை தேவை:மத்திய அரசுக்கு வலியுறுத்த



கோவை:"பருத்தி வர்த்தகம் மற்றும் தொழிலில் நெருக்கடியை தவிர்க்க, மத்திய அரசு, நிலையான ஏற்றுமதி கொள்கையை வகுக்க வேண்டும்' என, இந்திய பருத்தி கூட்டமைப்பு (ஐ.சி.எப்.,) பொதுக்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்திய பருத்தி கூட்டமைப்பின், 33வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம், நேற்று, கோவை வரதராஜபுரத்தில் நடந்தது. சங்கத் தலைவர் துளசிதரன், துவக்கி வைத்து பேசியதாவது:கடந்த, 1970களில், தென்னிந்திய பருத்தி சங்கம் (சைகா) துவங்கப்பட்ட நேரத்தில், ஆண்டுக்கு, 80 லட்சம் பேல் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. 2011-12ம் ஆண்டு, மூன்று கோடியே, 53 லட்சம் பேல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, ஏப்ரல் மாதம் வரை, பருத்தி விலை ஏறுமுகத்தில் இருந்தது. அதற்குப் பின், கடும் வீழ்ச்சி அடைந்தது. இதனால், பருத்தி வர்த்தகம் மற்றும் தொழிலில், மந்த நிலை ஏற்பட்டது.

எனினும், 2011 செப்டம்பர் முதல், 2012 ஜனவரி வரை, ரூபாய் மதிப்பு கடுமையாக வீழ்ச்சியடைந்ததால், வெளிநாட்டு வர்த்தகர்கள், இந்திய பருத்தி இறக்குமதி செய்ய, அதிக ஆர்வம் காட்டினர்.

ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால், பருத்தி ஏற்றுமதி, 14 சதவீதம் அதிகரித்தது. ஏற்றுமதி அதிகரித்ததால், இந்தியாவில் உள்நாட்டு நுகர்வுக்கு தேவையான பருத்திக்கே, தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. தட்டுப்பாடு குறித்த அச்சம் காரணமாக, இந்திய மில்கள், வெளிநாட்டு பருத்தியை இறக்குமதி செய்து வந்தன. இதனால், சர்வதேச சந்தையில்,

பருத்தி விலை உயர்ந்தது. குறைந்த காலத்தில், அதிக ஏற்றுமதி செய்வதால், பருத்தி வர்த்தகம் மற்றும் தொழிலில், அபரிமிதமான சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால், சமச்சீரான மற்றும் பரவலாக்கப்பட்ட ஏற்றுமதி சூழல் ஏற்பட, மத்திய அரசு, நிலையான கொள்கையை வகுக்க வேண்டும்.

தென்மேற்கு பருவமழை தாமதம் காரணமாக, நடப்பு நிதியாண்டில், பருத்தி உற்பத்தி வாய்ப்புகள் கவலை அளிக்கும் விதத்தில் உள்ளன.சர்வதேச அளவில், இந்தாண்டு, சீனாவின் பருத்தி நுகர்வு வாய்ப்புகள், குறைவாக உள்ளன. கடந்த ஆண்டு மட்டும், சீனா, 30 லட்சம் டன் கொள்முதல் செய்து, அதிகளவு இருப்பில் வைத்துள்ளது. ஆஸ்திரேலியா, பிரேசில், அர்ஜென்டினா நாடுகளில், பருத்தி உற்பத்தி இந்த ஆண்டில் அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தையில் ஏற்றுமதி செய்ய, ஒரு கோடி பேல் வரை, அவை கையிருப்பில் வைத்துள்ளன. அமெரிக்காவும், 1.2 கோடி பேல் ஏற்றுமதிக்கு தயாராக வைத்துள்ளதால், சர்வதேச சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு குறையும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, துளசிதரன் பேசினார்.கூட்டத்தில், ஐ.சி.எப்., துணைத் தலைவர்கள் விஸ்வநாதன், நடராஜ், செயலர் ரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மின் வெட்டால் தொழில் பாதிப்பு:இந்திய பருத்தி கூட்டமைப்பு தலைவர் துளசிதரன் பேசுகையில் கூறியதாவது:கடந்த ஓராண்டு காலமாக, இந்திய பருத்தி தொழில், கடும் நெருக்கடியில் உள்ளது. இந்திய பருத்தி நுகர்வில், தமிழகம், ஆந்திரா இரு மாநிலங்களுக்கும், மொத்தம், 55 சதவீத பங்களிப்பு உள்ளது. நிதி நெருக்கடி, உற்பத்தி பாதிப்பு காரணமாக, தமிழகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில், தொழிலில் நெருக்கடி அதிகரித்துள்ளது. இதற்கு, மின் பற்றாக்குறையும் முக்கிய காரணம். மேலும், பருத்தி விலை ஏற்றத்தாழ்வு காரணமாகவும், இந்திய நூற்பாலைகளுக்கு, பெருமளவு மூலதன இழப்பு ஏற்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

17th Sep 20012

## முந்திரி விவசாயிகளின் அடுத்த கவலை:போர்வெல் திட்டம் அமல் எப்போது



கடலூர்:"தானே' புயலில் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகள், மானியத்துடன் கூடிய போர்வெல் அமைக்கும் திட்ட அமலுக்காக காத்திருக்கின்றனர்.கடலூர் மாவட்டத்தில், "தானே புயலின் அ்”ர இவகத்தால் தோட்டக்கலைப் பயிர்கள் கடும் பாதிப்பிற்குள்ளாகின. மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கர் முந்திரி, பலா மரங்கள் அழிந்தன. முந்திரி கன்று வளர்க்க 5 முதல் 7 ஆண்டுகள் ஆகும். இந்நிலையில் அரசு, முந்திரி கன்று, சொட்டுநீர், உரம், மானியம் என உதவி செய்து விவசாயிகள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தி வருகிறது. இவையெல்லாம் இருந்தும் பல இடங்களில் தண்ணீர் பிரச்னை மிக முக்கியமானதாக உள்ளது. கடந்த 40 ஆண்டுகளாக தண்ணீர் வசதியின்றி பராமரிக்கப்பட்டு வந்த இந்த முந்திரி காடுகள் தற்போது மீண்டும் கன்று வைத்து வளர்க்க அதிக தண்ணீர் தேவைப்படுகிறது.வறண்ட பகுதியாக இருந்த இந்த காடுகளில் பல லட்சம் செலவு செய்து போர்வெல் போட விவசாயிகள் முன்வரவில்லை. அதனால் அரசு மானிய உதவியுடன் விவசாயிகளின் கூட்டு முயற்சியால் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க திட்டமிட்டுள்ளது.

இந்த திட்டத்தில் 4 முதல் 10 விவசாயிகள் அல்லது 20 முதல் 25 ஏக்கர் வரை பரப்புள்ள விவசாயிகள் கூட்டாக சேர்ந்து பயன்பெறலாம்.இதற்காக அரசு 70 சதவீத மானிய உதவியும், 15 ஏக்கருக்கு மேல் உள்ள தனி நபருக்கு 50 சதவீதம் மானிய உதவியுடன் ஆழ்துளை கிணறு அமைத்துக் கொள்ள திட்டம் தயாரித்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.இதற்கான உத்தரவு இதுவரை வழங்காததால், காத்திருக்கும் விவசாயிகள் வரும் கோடை காலத்தில் முந்திரி கன்றுகளை சமாளிப்பது எப்படி என குழப்பத்தில் உள்ளனர்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## 16.09.2012 P.M
## 17.09.2012 A.M

| 13th Sep 20012 | மேட்டூர் அணை இன்று திறப்பு |
|---|---|



மேட்டூர், செப். 16: மேட்டூர் அணை திறக்கும் நிகழ்ச்சியில் திங்கள்கிழமை 3 அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

சம்பா நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து திங்கள்கிழமை பகல் 12 மணிக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. விழாவில் பொதுப் பணித் துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, தொழில் துறை அமைச்சர் தங்கமணி, சேலம் மாவட்ட ஆட்சியர் க. மகரபூஷணம் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

மேல் மட்ட மதகுகள் வழியாக முதலில் தண்ணீர் திறக்கப்படும். பின்னர் நீர் மின் நிலையங்கள் வழியாக தண்ணீர் வெளியேற்றப்படும். வினாடிக்கு 5ஆயிரம் கனஅடி வீதம் திறக்கப்படும் தண்ணீர் தேவைக்கேற்ப படிப்படியாக அதிகரிக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை மாலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 11,287 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 83.56 அடியாக இருந்தது. குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 2,005 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. நீர் இருப்பு 45.59 டி.எம்.சியாக இருந்தது.

**13th Sep 20012** | செப்.20-ல் சிறப்பு கிராமசபைக் கூட்டம்

விருதுநகர், செப்.17: விருதுநகர் ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:
விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மேலச்சின்னையாபுரம்-50, கே.புதூர்-60, கடன்பன்குளம்-44, காரியாபட்டி ஒன்றியத்தில் கிழவனேரி-11, நரிக்குடி ஒன்றியத்தில்-மானூர்-20, மறையூர்-27, சாத்தூர் ஒன்றியத்தில் கரிசல்பட்டி-24, கத்தாளம்பட்டி-43, ராஜபாளையம் ஒன்றியத்தில் கொருக்காம்பட்டி-36, சிவகாசி ஒன்றியத்தில்-எம்.புதுபட்டி-36, மங்கலம்-53, மேலாமத்தூர்-59, வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் ஜெகவீரம்பட்டி-13 என மொத்தம் 476 பேருக்கு விலையில்லா ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கப்பட இருக்கின்றன.
ஊராட்சிகளில் செப்.20-ல் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடத்தி, அதில் திட்டம் குறித்து விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

மேலும், 20-ம் தேதி முதல் 26-ம் வரையில் பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று, பெறப்பட்டுள்ள மனுக்களில் தகுதியானவர்களைத் தேர்வு செய்து, அதுகுறித்த விவரப் பட்டியலை 27-ம் தேதி கூட்டம் நடத்தி ஒப்புதலுக்கு வைத்து, மாவட்ட நிர்வாகத்திடம் வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**13th sep 2012 P.M News**

**16th Sep 20012** | "வேளாண் பணிகளில் நவீன தொழில்நுட்பம் அவசியம்'

நாகப்பட்டினம், செப். 15: வேளாண் பணிகளில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் குறைந்த செலவில் அதிக மகசூலை விவசாயிகள் பெற முடியும் என்றார் மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவர் சாந்தஷீலா நாயர்.
நாகை மாவட்டம், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வயல் தின விழாவில் அவர் பேசியது:
தாய்லாந்து மண்டல ஒருங்கிணைந்த பல்முனை பேரழிவு முன்னெச்சரிக்கை முறைமை சார்பில் இந்தியாவிலேயே முதல் முறையாக நாகை மாவட்டம், குத்தாலம் மற்றும் கீழ்வேளூர் வட்டாரங்களில்தான் காலநிலை இடர் மேலாண்மை வயல் வெளிப் பள்ளி மூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டியது காலத்தின் அவசியம். இதன் மூலம், செலவுகளை குறைத்து மகசூலை அதிகப்படுத்த முடியும். இது குறித்து விவசாயிகளுக்கு

அளிக்கப்படும் பயிற்சியை, மாவட்ட அளவில் நிறைவு செய்திடாமல் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும்.
தமிழக அரசு விவசாயத்துக்கு முன்னுரிமை அளித்தே திட்டங்களை செயல்படுத்துகிறது. மானிய விலையில் உரம், இடு பொருள்கள் மற்றும் குறைந்த வாடகையில் டிராக்டர் உள்ளிட்ட இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றை சரியான முறையில் பயன்படுத்தி, விவசாயிகள் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற வேண்டும் என்றார் சாந்தஷீலா நாயர்.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி பேசுகையில், காலநிலை இடர்பாடுகளுக்கு ஏற்ப புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி சிறப்பான திட்டத்துடன் விவசாயப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் விவசாயிகள் நிச்சயமாக நல்ல லாபத்தை ஈட்ட முடியும் என்றார். சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் இரா. ராஜேந்திரன், உதவிப் பேராசிரியர் க. சிவக்குமார், வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

| 16th Sep 20012 | ஆத்மா திட்ட ஆலோசனைக்கூட்டம் |
|---|---|

உளுந்தூர்பேட்டை, செப். 15: விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் வேளாண்துறை சார்பில் ஆத்மா திட்டம் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.
கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் ச.கருணாநிதி தலைமை வகித்தார்.
கூட்டத்தில் வேளாண்மை அலுவலர் சவிதா, விரிவாக்க அலுவலர் காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆத்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் குழுத் தலைவராக சிக்காடு கோவிந்தன் போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

| 16th Sep 20012 | வட்டியில்லாப் பயிர்க் கடன்: 679 பேர் விண்ணப்பம் |
|---|---|

பெரம்பலூர், செப். 15: விவசாயிகளுக்கான வட்டியில்லாப் பயிர்க் கடன் வழங்கும் சிறப்பு முகாமில் 679 விண்ணப்பங்கள் பெறப்பட்டன என்றார் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.
பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விவசாயிகளுக்கான வட்டியில்லாப் பயிர்க் கடன் வழங்கும் சிறப்பு முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த முகாமைத் தொடக்கிவைத்த ஆட்சியர் மேலும் பேசியது:

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் பங்கேற்ற முகாமில் பருத்தி, மக்காச்சோளம், நெல், மரவள்ளிக் கிழங்கு, மஞ்சள், கடலை, கரும்பு ஆகிய பயிர்கள் சாகுபடி செய்வதற்காக 679 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.
விவசாயிகள் அளித்த விண்ணப்பங்கள் கணினி மூலம் பதிவு செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகைச் சான்றும் அளிக்கப்பட்டது. வருவாய்த்துறையினர் மூலம் விவசாயிகளுக்கு தேவையான சிட்டா, சொத்துப் பொறுப்புப் பட்டியல், கிராம கணக்கு நகல் போன்ற ஆவணங்கள் வழங்கப்பட்டன.
விவசாயிகள் அளித்த விண்ணப்பங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில், விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு விரைவாக பயிர்க் கடன் வழங்கப்பட உள்ளது.
விவசாயிகளுக்கான பயிர்க் கடன் குறித்த சந்கேங்களுக்கு வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட விவசாயிகள், கூட்டுறவு சார்பதிவாளர் மணிமேகலை (88838 10445), வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட விவசாயிகள், கூட்டுறவு சார்பதிவாளர் செல்வராஜ் (94438 88674), ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட விவசாயிகள், கூட்டுறவு சார்பதிவாளர் குமார் (97512 83536) ஆகியோரைத் தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம் என்றார் ஆட்சியர்.

கோட்டாட்சியர் இரா. ரேவதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கி. கண்ணதாசன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் எம். உமாமகேஸ்வரி, துணைப்பதிவர் ஆத்மநாதன், மத்தியக் கூட்டுறவு வங்கி களமேலாளர் எஸ். துரை அரசு, கூட்டுறவு சார் பதிவாளர்கள் குமார், கிருஷ்ணமூர்த்தி, அழகுராஜ்

**16th Sep 20012** | **மஞ்சள் விவசாயிகள் மறியல்: ஏலம் முழுவதும் ரத்து**

ஈரோடு, செப். 13: ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூட மஞ்சள் ஏலத்தில் நடந்த முறைகேட்டைக் கண்டித்து, மஞ்சள் விவசாயிகள் வியாழக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து ஏலம் முற்றிலும் ரத்து செய்யப்பட்டது.
ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஈரோடு, கோவை, திருப்பூர், கரூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல், வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்தும், கர்நாடக மாநிலம், மைசூர் மாவட்டத்தில் இருந்தும், கேரள மாநிலத்தில் இருந்தும் விவசாயிகள் மஞ்சளைக் கொண்டுவந்து விற்பனை செய்து வருகின்றனர்.
இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் சார்பில் ஒரு குவின்டால் மஞ்சளை ரூ. 9,000-க்குக் குறைவாக விவசாயிகள் விற்பனை செய்ய வேண்டாம் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால், ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் இப்போது வருவதில்லை.
ஆனால், தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, திண்டுக்கல் போன்ற வெளிமாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் வரும் விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வியாழக்கிழமை மஞ்சள் ஏலம் நடந்த போது பிற்பகல் 1 மணிக்கு முன்பு 3 வியாபாரிகள் மட்டுமே வந்தனர். அவர்கள் மட்டும் விலைப்புள்ளியை போடும் பெட்டியில் தங்களது விலையை குறிப்பிட்டுப் போட்டனர். 1 மணிக்கு மேல் வந்த வியாபாரிகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகளை நேரடியாகப் பார்த்து விலைப்புள்ளியை வழங்கினர்.
இதைத் தொடர்ந்து, ஏற்கெனவே ஏலம் போன தொகையை விடக் குறைவாக விலை குறிப்பிடப்பட்டு எழுதப்படுவதாக தகவல் வெளியானது. இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஈரோடு- பவானி சாலையில் மறியலில் ஈடுபட்டனர். போலீஸôர் அவர்களை அழைத்துப் பேச்சு நடத்தினர்.
இது குறித்து ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மணி கூறியது:
புதன்கிழமை ஏலம் போன தொகையைவிட ரூ. 600 மட்டுமே குறைவாக விலை போனது. வியாபாரிகள் குறைத்து ஏலம் எடுத்தால் நாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்?
மதியம் 1 மணிக்குப் பிறகு வரும் வியாபாரிகளிடம் இருந்து விலைப்புள்ளியை நேரடியாக கையில் வாங்குவது தான் இதுவரை நடைமுறையாக இருந்து வருகிறது.

வியாழக்கிழமை 155 மஞ்சள் மாதிரிகள் வந்தன. விவசாயிகள் போராட்டம் காரணமாக ஏலம் முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டது என்றார்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## 17.09.2012 A.M

17th Sep 20012

**உலக அளவில் நெல் உற்பத்தியை அதிகரிக்க 2–வது பசுமை புரட்சி தேவை**
**சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் பேச்சு**

உலக அளவில் நெல் உற்பத்தியை அதிகரிக்க 2–வது பசுமை புரட்சி தேவை என்று சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் கூறினார்.

கருத்தரங்கு

கோவை வேளா பல்கலைக்கழகத்தில் உலக உணவு பாதுகா பை உறுதி செய்ய நெல் ஆராய்ச்சியில் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப புதிய அணுகுமுறைகள் என்ற தலை பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி தலைமை தாங்கினார். நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் கே.தியாகராஜன் வரவேற்றார்.

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவன தலைமை இயக்குனர் ராபர்ட் ஜீக்லர் சிற பு விருந்தினராக கலந்து கொ டு கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார். அ போது அவர் கூறியதாவது:–

காலநிலை மாற்றம்

உலக அளவில் 3 பில்லியன் மக்களால் விரும்பி சா பிடும் உணவுவாக அரிசி திகழ்கிறது. ஆசியாவில் 600 மில்லியன் மக்களுக்கு நெல் (அரிசி) ஒரு முக்கிய உணவு பயிராகும். உலக அளவில் 90 சதவீத நெல் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆசிய

க   டத்தில் காண  படுகிறது.

காலநிலை மாற்றத்தால் நெல் உற்பத்தியில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படுகிறது. சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவன கணக்குபடி வருகிற 2050–ம் ஆ   டில் அரிசி விலை 32 முதல் 37 சதவீதம் வரை அதிகரிக்கும் என்று குறி பிட்டு உள்ளது. மேலும் நெல் உற்பத்தியில் தெற்கு ஆசியாவில் 14 சதவீதமும், கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பகுதியில் 10 சதவீதமும், ஆ பிரிக்காவில் 15 சதவீதமும் குறைய வாய் பு உள்ளதாக தெரிவிக்கிறது.

உற்பத்தி பாதி பு

காலநிலை மாற்றத்தால் கடல்  ர் மட்டம் உயர்தல், உ புத்தன்மை அதிகரித்தல், வெள்ள  பெருக்கு, காற்றில் கரியமில வா   அதிகரித்தல், வெ பம் அதிகரி பு, த   ணீர் பற்றாக்குறை, பூச்சி, நோய் தாக்குதல் மற்றும் களைகள் அதிகரி பு ஆகிய காரணிகள் மூலம் நெல் உற்பத்தி மிகவும் பாதிக்க படும்.காலநிலை மாறுபாட்டுக்கு ஏற்ப வளரும் நெல் ரகங்களை க   டறிய சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி மேற்கொ   டு வருகிறது. இதன்படி திடீர் வெள்ள பெருக்கு ஏற்படும் காலங்களில் 2 வாரங்கள் வரை வெள்ளத்தை தாங்கும் தன்மை கொ   ட நெல் ரகங்கள், குறைந்த  ரில் வளர்ந்து அதிக மகசூல் தரும் நெல் ரகங்கள், கரியமில வா   குறைந்த அளவு வெளியிடும் நெல் ரகங்கள், உற்பத்தி செலவினங்கள் குறை பு, அரிசி சமை பதற்கு ஆகும் நேரத்தை குறை பது ஆகியவற்றின் மூலம் அதன் தாக்கத்தை குறைக்கலாம்.

அதன்படி சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் உவர் நிலத்துக்கு ஏற்ற நெல் ரகங்கள், வறட்சியை தாங்கி வளரும் நெல் ரகங்கள்,  ர் பயன்பாட்டை அதிகரிக்க கூடிய தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ளுதல், செல்போன் மூலம் உரம் மேலா   மை குறித்த தகவல்களை பகிர்ந்து கொள்ளுதல், நெல் பயிரில் அதிக மகசூலுக்கு இடையூறாக விளங்கும் காரணிகளை ஒளிச்சேர்க்கை மூலம் தகர்த்தல் போன்றவை ஆகும்.

வேலை ஆட்கள் பற்றாக்குறை

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம், கோவை வேளா   பல்கலைக்கழகத்துடன் இணைந்து புதுவகையான நெல் உற்பத்தி முறையை க   டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. தற்போது விவசாயத்தில் வேலை ஆட்கள் பற்றாக்குறை. கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தேக்க நிலை நிலவுகிறது.

உலக அளவில் வருகிற 2035–ம் ஆ டில் 114 மில்லியன் டன் நெல் உற்பத்தி தேவை படும். உலக அளவில் நெல் உற்பத்தியை அதிகரிக்க 2–வது பசுமை புரட்சி தேவை. அதற்கு உ டான வழிமுறைகளை இ போதே தொடங்க வே டும். இல்லை எனில் உணவு உற்பத்தி கேள்விக்குறி ஆகிவிடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், மாணவ–மாணவிகள் உள்பட பலர் கலந்து கொ டனர்.

17th Sep 20012

**உர விற்பனை நிலையங்களில்**
**வேளா மைத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு**

உர விற்பனை நிலையங்களில் வேளா மைத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற் கொ டனர்.

ஆய்வு

டெல்டா மாவட்டங்களுக்காக தமிழகஅரசு அறிவித்துள்ள சம்பா சாகுபடி சிற பு தொகு பு திட்டம் விவசாயிகளிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தி ள்ளது. சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெற ரசாயன உரங்கள் இடுவது அவசியம். ரசாயன உரங்கள் கிடை பதில் எந்தவித இடர்பாடும் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடாது என்பதில் வேளா மைத்துறை தீவிரமாக க காணித்து வருகிறது. தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான யூரியா, டி.ஏ.பி, பொட்டாஷ் மற்றும் இதர காம் ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளா மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் விநியோகம் செய்வது வேளா மைத்துறை அதிகாரிகளால் க காணிக்க பட்டு வருகிறது.

தஞ்சை வட்டாரத்தில் உள்ள உர விற்பனை நிலையங்களில் மாவட்ட வேளா மை இணை இயக்குநர் முகமதுயாகியா தலைமையில் அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொ டனர். இதில் உரம் இரு பு பதிவேடு, பில் புத்தகம், அனுமதி அளிக்க பட்ட நிறுவனங்களின் உரங்கள் மட்டும் விற்பனை செய்ய படுகிறதா என ஆய்வு மேற்கொள்ள பட்டது. மூட்டைகளின் மேல் குறி பிட்டுள்ள விலைக்கு உட்பட்டு உரங்கள் பில்போட்டு விவசாயிகளுக்கு வழங்க படுகிறதா? என்பது குறித்தும் ஆய்வு செய்ய பட்டது.

கண்காணி புக்குழு

உர இரு பு பதிவேட்டின்படி உள்ள இரு பும் குடோன்களில் உள்ள இரு பும் சரியாக உள்ளதா**?** என்பதும் கணக்
கிட பட்டு சி பம் வாரியாக எ ணி பார்க்க பட்டது. நட பு சம்பா பருவத்தில் உர விநியோகத்தில் எந்தவித இடர்பாடும் இல்லாமல் இரு பதை உறுதி செய்ய மேலும் ஒவ்வொரு வட்டாரங்களிலும் உர க காணி பு குழு அமைத்து உர விநியோகத்தை தீவிரமாக க காணிக்க வேளா மை இணை இயக்குநர் முகமது யாகியா உத்தரவு பிற பித்துள்ளார்.

இந்த ஆய்வின்போது வேளா மை உதவி இயக்குநர்(தரக்கட்டு பாடு) மணி மாறன், தஞ்சை வேளா மை உதவி இயக்குநர் நெடுஞ் செழியன், வேளா மை அலுவலர்(தரக்கட்டு பாடு) பிரபாகர், வேளா மை அலுவலர் சுஜாதா ஆகியோர் உடன் இருந்தனர்.